2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க விளக்கக் குறிப்பு

இலங்கை மத்திய வங்கி

2020 மாச்சு 25

**கொவிட்-19 பாதிப்பிற்குட்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நிவாரண வழிமுறைகள் தொடர்பான 2020ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சுற்றறிக்கைக்கான பொருள் விளக்கங்கள்**

கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட சட்ட ரீதியான கடன் இசைவுத்தாமதம் தொடர்பான 2020 மாச்சு 24ஆம் திகதியிடப்பட்ட 04ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பாகப் பின்வரும் பொருள் விளக்கம் தரப்படுகிறது.

1. அமைச்சரவையின் தீர்மானத்திற்கு இசைவாக, இலங்கை மத்திய வங்கியானது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உட்பட, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்குச் சுற்றறிக்கையினை விடுக்கிறது.

2. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் விடயம் 1 மற்றும் 2 இற்கிணங்க, எழுத்து மூலமான கோரிக்கைகளை வாடிக்கையாளர்கள் விடுக்குமிடத்து, அத்தகைய வாடிக்கையாளர்களுக்கு 2020.04.30 வரை கடன் வசதிகளை வழங்குமாறும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றை 45 நாட்களுக்கிடையில் இறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. நிதியியல் நிறுவனங்களின் அனைத்துக் கிளைகளும் குறைந்தபட்ச எண்ணிக்கையினைக் கொண்ட ஊழியர்களுடன், ஊரடங்குச் சட்டம் இல்லாத நாட்களில் மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 1.00 மணிவரை திறந்திருத்தல் வேண்டும்.